| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 36 + 19 = 55 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 32

Total No. of Questions : 36 + 19 = 55 ] [ Total No. of Printed Pages : 32

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **83-T** **ವಿಷಯ : ವಿಜ್ಞಾನ**

**Code No. : 83-T** **Subject : SCIENCE**

**( ಭೌತಶಾಸ್ತ್ರ, ರಸಾಯನಶಾಸ್ತ್ರ ಮತ್ತು ಜೀವಶಾಸ್ತ್ರ / Physics, Chemistry & Biology )**

( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )

ದಿನಾಂಕ : 20. 06. 2012 ] [ Date : 20. 06. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 09-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 09-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**FOR OFFICE USE ONLY**

**PART – A**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 9. | | 17. | | 25. | | 33. | |
| 2. | | 10. | | 18. | | 26. | | 34. | |
| 3. | | 11. | | 19. | | 27. | | 35. | |
| 4. | | 12. | | 20. | | 28. | | 36. | |
| 5. | | 13. | | 21. | | 29. | | × | |
| 6. | | 14. | | 22. | | 30. | | × | |
| 7. | | 15. | | 23. | | 31. | | × | |
| 8. | | 16. | | 24. | | 32. | | × | |
| ***Total Marks of Part – A*** | | | | | | | | | |

**PART – B**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37. | | 41. | | 45. | | 49. | | 53. | |
| 38. | | 42. | | 46. | | 50. | | 54. | |
| 39. | | 43. | | 47. | | 51. | | 55. | |
| 40. | | 44. | | 48. | | 52. | | × | |
| ***Total Marks of Part – B*** | | | | | | | | | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ | |
| 2. ✓ | | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

*பொதுவான குறிப்புகள் :*

i) இந்த வினா விடைத்தாள் தொகுப்பில் பல்வகை விடை-வினா வகை ( Objective type ) வினாக்கள் மற்றும் விடைகளை எழுதும் வகை ( Subjective type ) வினாக்கள் என மொத்தம் 55 வினாக்கள் உள்ளன.

ii) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பில் இரண்டு பகுதிகள் உள்ளன. **பகுதி - அ** வில் **இயற்பியல்** மற்றும் **வேதியியல்** சம்பந்தப்பட்ட வினாக்களும் மற்றும் **பகுதி - ஆ** வில் **உயிரியல்** சம்பந்தப்பட்ட வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

iii) இந்த வினா-விடைத்தாள் **பகுதி - அ** 36 வினாக்களையும் மற்றும் **பகுதி - ஆ** 19 வினாக்களையும் கொண்டுள்ளது.

iv) பல்வகை விடை-வினா வகை வினாக்களுக்கு ( Objective type questions ) விடை எழுதுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நீங்கள் சரியான விடை என தேர்வு செய்த விடையை அவ்விடைக் குறியீட்டுடன் முழுவதுமாக எழுத வேண்டும்.

v) விடைகளை எழுதும் வகை வினாக்களுக்கு ( Subjective type questions ) ஒவ்வொரு வினாவிற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே விடையளிக்க வேண்டும்.

vi) பல்வகை விடை வினாவகை ( Objective type ) மற்றும் எழுதும் வகை வினாக்களுக் ( Subjective type ) கென வழங்கப்பட்டுள்ள குறிப்புகளை கவனமாக கடைப்பிடிக்கவும்.

vii) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலில் எழுதுதல் கூடாது. ( வரைபடங்கள், படங்கள் மேப்புகளை தவிர ). இவ்விதியை மீறி பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

viii) பல்வகை வினா-விடை வகை வினாக்கள், கோடிட்ட இடங்களை நிரப்புதல் மற்றும் பொருத்துக போன்ற வினாக்களில் அழித்து எழுதுதல் / சுரண்டுதல் / குறியிடுதல்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறினால் விடைகள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

ix) ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் வினாக்களை செய்து பார்ப்பதற்கென இடம் தரப்பட்டுள்ளது.

x) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

## பகுதி - அ
## ( இயற்பியல் & வேதியியல் )

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டு உள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியானது அல்லது மிகப்பொருத்தமானது. மிகச் சரியான விடையை அதன்கீழ் விடப்பட்டுள்ள விடைப்பகுதியில் அதன் குறியீட்டு எழுத்துடன் முழுமையாக எழுதவும். $10 \times 1 = 10$

1. ஒரு ஒளி மின்விளைவுச் சோதனையில், ஒளி எலக்ட்ரான்களின் எண்ணிக்கையானது அவைகளின் அதிர்வெண்கள் மாறாமல் அதிகரிக்கப்பட வேண்டும் எனில் படுகதிரில் ( Incident radiation ) செய்யப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கை

   (A) அதிர்வெண்ணை அதிகரிக்காமல் அதன் செறிவை ( intensity ) மாற்றுவது

   (B) அதிர்வெண் மற்றும் செறிவை அதிகரிப்பது

   (C) செறிவை அதிகரிக்காமல் அதிர்வெண்ணை அதிகரிப்பது

   (D) அதிர்வெண்ணை மட்டும் அதிகரிப்பது.

   *விடை :* ____________________

( SPACE FOR ROUGH WORK)

2. உண்மையான நவரத்தின கற்களை ( Gems ) செயற்கையான நவரத்தின கற்களிலிருந்து வேறுபடுத்த ஒரு வியாபாரி எந்த வகையான கதிர்களைப் பயன்படுத்தவேண்டும் ?

(A) அகச்சிவப்பு கதிர்கள்

(B) $\gamma$-கதிர்கள்

(C) $X$-கதிர்கள்

(D) புறஊதாக் கதிர்கள்.

*விடை :* ______________________

3. கார்புரேட்டரின் பணி

(A) என்ஜினுக்கு பெட்ரோலை மட்டும் அனுப்புவது

(B) என்ஜினுக்கு காற்றை மட்டும் அனுப்புவது

(C) என்ஜினுக்கு பெட்ரோல் மற்றும் காற்றுக் கலவையை அனுப்புவது

(D) என்ஜினுக்கு டீசல் மற்றும் காற்றை அனுப்புவது.

*விடை :* ______________________

4. பின்வரும் என்ஜின்களில் எது அதிக திறன் வாய்ந்தது ?

| | பயன்படுத்தப்பட்ட வெப்பம் | செய்யப்பட்ட வேலை |
|---|---|---|
| (A) | 80 கிலோ ஜூல்கள் | 32 கிலோ ஜூல்கள் |
| (B) | 60 கிலோ ஜூல்கள் | 12 கிலோ ஜூல்கள் |
| (C) | 50 கிலோ ஜூல்கள் | 25 கிலோ ஜூல்கள் |
| (D) | 90 கிலோ ஜூல்கள் | 27 கிலோ ஜூல்கள். |

*விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK)**

5. எக்கோ கார்டியாகிராபி ( Echo cardiography )-யில் பயன்படும் ஒலி அலைகளின் அதிர்வெண்

(A) 20 ஹெர்ட்ஸ் லிருந்து 20 கிலோ ஹெர்ட்ஸ் வரை

(B) 20 ஹெர்ட்ஸ் லிருந்து 2 கிலோ ஹெர்ட்ஸ் வரை

(C) 20 கிலோ ஹெர்ட்ஸ்க்கும் அதிகமாக

(D) 20 ஹெர்ட்ஸ்க்கும் குறைவாக.

*விடை :* ____________________

6. கைகா அணுமின் நிலையத்தில் எரிபொருளாகப் பயன்படுவது

(A) நிலக்கரி

(B) யுரேனியம்

(C) பெட்ரோல்

(D) இயற்கை வாயு.

*விடை :* ____________________

7. $C_{10}H_{22} \xrightarrow{\text{வெப்பம்}} C_5H_{12} + x$

இந்த சமன்பாடு ஆனது பிளத்தல் ( Cracking ) சோதனையைப் பற்றியது எனில் '$x$' என்ற இடத்தில் இருக்க வேண்டிய சேர்மம்

(A) $C_5H_{10}$

(B) $C_5H_{12}$

(C) $C_5H_8$

(D) $C_5H_5$.

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

8. அழுத்த சமையற்கலனின் ( Pressure cooker ) கேஸ்கட் ( Gasket )-ஐ செய்யப் பயன்படுத்தப்படும் பலபடி ( Polymer )

(A) பாலித்தீன்

(B) நைலான்

(C) டெப்லான்

(D) தையாக்கால்.

*விடை :* ______________________

9. சவுக்காரங்கள் மற்றும் தூய்மையாக்கிகள் ( Soap and detergents ) செய்யப் பயன்படுத்தப்படும் பொதுவான மூலப்பொருள்

(A) கந்தக அமிலம்

(B) சோடியம் ஹைட்ராக்ஸைடு

(C) ஸ்டீயரிக் அமிலம்

(D) நீண்ட சங்கிலி ஹைட்ரோ கார்பன்கள்.

*விடை :* ______________________

10. தூய்மையாக்கிகள் ( Detergents ) சோப்பைவிட அதிக திறனுடன் சுத்தம் செய்கின்றன. எனினும் அவற்றின் பயன்பாட்டை குறைக்க வேண்டும் ஏனெனில்

(A) அவை விலை உயர்ந்தவை

(B) அவை சுற்றுப்புறத்திற்கு நண்பனாக விளங்கவில்லை

(C) அவற்றின் உற்பத்திச் செலவு அதிகம்

(D) கடின நீருடன் ஸ்கம் ( Scum )-ஐ உருவாக்குகின்றன.

*விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK)**

கோடிட்ட இடங்களை நிரப்புக : 3 × 1 = 3

11. ஒரு டிரான்ஸிஸ்டரில் அதிகம் மாசூட்டப்பட்ட பகுதி .................... .

12. நீரில் மீயொலியின் ( Ultrasound ) திசைவேகமானது 1·5 கி.மீ/வினாடி, எனில் 3 வினாடிகளில் அது நீரில் கடந்த தூரம் .................... .

13. செயற்கை துணைக்கோள்களில் ( Artificial satellites ) மின்சாரத்தை வழங்கப் பயன்படுத்தப்படும் சாதனம் .................... .

14. **பட்டியல்-அ** வில் உள்ள சேர்மங்களை ( Compounds ) **பட்டியல்-ஆ** வில் உள்ள மூலக்கூறு வாய்ப்பாடுகளுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் விடைகளை எழுதவும் : 4 × 1 = 4

| பட்டியல் - அ | பட்டியல் ஆ |
|---|---|
| (a) $H-C\equiv C-H$ | (i) மீத்தேன் |
| (b)  | (ii) டொலுயீன் |
| (c)  | (iii) ஈத்தீன் |
| (d)  | (iv) ஈத்தேன் |
| | (v) ஈதைன் |
| | (vi) பென்சீன் |
| | (vii) புரோப்பீன். |

*விடைகள் :*

a) ____________________

b) ____________________

c) ____________________

d) ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வருவனவற்றிற்கு விடையளி : 6 × 1 = 6

15. சென்டிரிப்யூஜில் ( Centrifuge) பல்வேறு அடர்த்திகளை கொண்ட துகள்கள் எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகின்றன ?

16. மையநோக்கு விசை ( Centripetal force ) என்றால் என்ன ?

17. நமது காலக்ஸி ( Galaxy )-யின் பெயரினைக் கூறுக.

**( SPACE FOR ROUGH WORK)**

18. சூரிய நீர் சூடேற்றியில் ( Solar water heater ) கண்ணாடி கவரை நீக்கினால் என்ன நடக்கும் ?

19. ஒளிரும் மின் குழல்விளக்குகளை ( Fluorescent tubes ) விநியோகிக்கும் திட்டத்தை கர்நாடக அரசு மேற்கொண்டுள்ளது. இது ஆற்றல் தட்டுப்பாட்டிற்கு ஓர் குறைதீர் நடவடிக்கை. எவ்வாறு ?

20. உமது வீட்டிற்கு வழங்கப்பட்ட நீரானது தற்காலிக கடினத் தன்மையுடையது என்பதை நீவிர் எங்ஙனம் சோதிப்பீர்கள் ?

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : $9 \times 2 = 18$

21. பிளமிங்கின் இடக்கை விதியில், கட்டைவிரல் ( Thumb ), ஆள்காட்டி விரல் ( Forefinger ) மற்றும் நடுவிரல் ( Central finger ) இவற்றுக்கு இடையேயுள்ள கோணம் எவ்வளவு ? ஒவ்வொரு விரலும் எதைக் குறிப்பிடுகிறது ?

22. AC டைனமோவின் தெளிவான படம் வரைக, கிராபில் அதன் புறச்சுற்றை ( External circuit ) வரைந்து அதில் மின்னோட்டத்தை ( current ) சுட்டிக் காட்டுக.

**( SPACE FOR ROUGH WORK)**

23. லேசர் ஒளிக்கும் சாதாரண ஒளிக்கும் உள்ள வேறுபாட்டினைத் தருக.

24. ஒரு எளிய வானொலி ஏற்பியின் கட்டப்படம் வரைக.

( SPACE FOR ROUGH WORK)

25. பெட்ரோல் என்ஜினின் படம் வரைந்து அதன் பாகங்களைக் குறிக்கவும்.

( SPACE FOR ROUGH WORK)

26. ஒரு மாணவர், துத்தநாகத் தகடை ( Zinc plate ) தாமிர சல்பேட் கரைசலில் அமிழ்த்துகிறார். எனில் இங்கு நடக்கும் வேதிவினைக்கான சமன்பாட்டினைத் தருக. இவ்வினையில் எந்த உலோகமானது இடப்பெயர்ச்சி ( Displaced ) அடைகிறது ?

27. படிக சிலிக்கானை பெறும் முறையினை வேதி வினையுடன் தருக.

( SPACE FOR ROUGH WORK)

28. சிமெண்ட் தயாரித்தலில் உள்ள பல்வேறு படிநிலைகளை விவரி.

**( SPACE FOR ROUGH WORK)**

29. பெர்முடிட் வழியாக கால்சியம் குளோரைடை கொண்டுள்ள கடினநீரை அனுப்பும் போது நடக்கும் வேதிவினையின் சமன்பாட்டை எழுதுக.

( SPACE FOR ROUGH WORK)

பின்வருவனவற்றிற்கு விடையளி : 4 × 3 = 12

30. ஈர்ப்பு விதியைப் ( Law of gravitation ) பற்றிய பொதுவான விதியை ( Universal law ) தருக. இவ்விதியினை கணித முறையில் எவ்வாறு எழுதலாம் ?

( SPACE FOR ROUGH WORK)

31. இராமன் விளைவை செய்து காண்பிப்பதற்கென C. V. இராமன் நடத்திய சோதனையை விவரி.

இவ்விளைவின் பயன் என்ன ?

**( SPACE FOR ROUGH WORK)**

32. ஒரு கதிரியக்க உட்கரு $_{Z}X^{A}$-வானது ஒரு ஆல்பா துகளை உமிழ்ந்து $Y$ ஆக மாறுகிறது. $Y$ யின் அணு எண் மற்றும் நிறை எண்ணைக் குறிப்பிடு. ஒரு தனிமம் மற்றொரு தனிமமாக மாறுவதை நீவிர் என்னவென்று அழைப்பீர் ?

( SPACE FOR ROUGH WORK)

33. ஒரு அணு மின் உலையின் தெளிவான படம் வரைந்து அதன் பாகங்ளைக் குறிக்க.

( SPACE FOR ROUGH WORK)

பின்வருவனவற்றிற்கு விடையளி : $3 \times 4 = 12$

34. a) செயற்கைகோள்களை செலுத்த பல அடுக்கு இராக்கெட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஏன் ?

b) விடுபடு திசைவேகம் என்றால் என்ன ?

c) புவியின் புறப்பரப்பிலிருந்து $h$ என்ற உயரத்தில் புவியை சுற்றி வரும் செயற்கைகோளின் சுற்றுப்பாதை திசைவேகத்திற்கான சமன்பாட்டினை எழுதுக.

**( SPACE FOR ROUGH WORK)**

35. விண்மீன்களின் பரிணாம வளர்ச்சியில் பின்வருவனவற்றை விவரி.

i) புரோட்டோ ஸ்டார் ( Proto star ) ii) ஸ்டெடி ஸ்டேட் ( Steady state ).

**( SPACE FOR ROUGH WORK)**

36. இரும்பை பிரித்தெடுக்கப் பயன்படும் ஒரு ஊது உலையின் ( Blast furnace ) தெளிவான படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.

( SPACE FOR ROUGH WORK)

## பகுதி - ஆ

### ( உயிரியல் )

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று மட்டுமே சரியான அல்லது மிகப் பொருத்தமானது. மிகச் சரியான விடையை அதன் கீழ் தரப்பட்டுள்ள விடைப் பகுதியில் குறியீட்டு எழுத்துடன் முழுமையாக எழுதவும். $5 \times 1 = 5$

37. ஹெப்படைடிஸ்-$B$ எதன் மூலம் பரவாது ?

    (A) அசுத்தமான உணவு

    (B) கொசுக்கடி

    (C) நோய் தொற்றியவர்களுடன் பாலுறவு கொள்ளுதல்

    (D) சுத்தப்படுத்தப்படாத ஊசிகளை பயன்படுத்துவது.

    *விடை :* ______________________

38. ட்ராப்ஸி : ஆர்க்கிமோன் எண்ணெய் :: மினமேட்டா : .................... .

    (A) மெத்தில் சயனைடு

    (B) மெத்தில் புரோமைடு

    (C) மெத்தில் குளோரைடு

    (D) மெத்தில் மெர்குரி.

    *விடை :* ______________________

**( SPACE FOR ROUGH WORK)**

39. திசு வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட இளம் தாவரங்கள் ( Saplings ) எதன் மூலம் உருவானவை ?

(A) மைட்டாசிஸ்

(B) மியாஸிஸ்

(C) உட்கரு பிளவு ( Karyokinesis )

(D) சைட்டோபிளாச பிரிவு ( Cytokinesis )

*விடை :* ____________________

40. பருத்தி ஆடைகள் என்பவை பொதுவாக .................... செல்களால் ஆனவை.

(A) கேம்பியம் ( Cambium )

(B) கோலன்கைமா ( Collenchyma )

(C) ஸ்கிளிரன்கைமா ( Sclerenchyma )

(D) ஸ்கிளிரைடு ( Scleride ).

*விடை :* ____________________

41. ஒரு சீலிடப்பட்ட பாக்கெட் நெய்யை வாங்கும் போது, ஒருவர் எம்முத்திரையிருக்கிறதா என கவனிக்க வேண்டும் ?

(A) ISI (B) AGMARK

(C) FPO (D) ISO.

*விடை :* ____________________

**( SPACE FOR ROUGH WORK)**

42. **பட்டியல் - அ** வில் தரப்பட்டுள்ள தாவரங்களை **பட்டியல் - ஆ** வில் உள்ள அவற்றின் பண்புகளுடன் ( Characters ) பொருத்தவும்: 4 × 1 = 4

| **பட்டியல் - அ** | | **பட்டியல் - ஆ** | |
|---|---|---|---|
| (a) | ரிக்ஸியா ( Riccia ) | (i) | வாஸ்குலார் திசுவுடன் கூடிய புரோதேலஸ் |
| (b) | சைகஸ் ( Cycas ) | (ii) | வாஸ்குலார் திசுக்களற்ற தண்டு |
| (c) | எக்டோகார்பஸ் ( Ectocarpus ) | (iii) | வால்குலார் திசுக்களற்ற ரைசாய்டு |
| (d) | செலாஜினெல்லா ( Selaginella ) | (iv) | வாஸ்குலார் திசுக்களுடன் கூடிய தண்டு |
| | | (v) | வாஸ்குலார் திசுக்களற்ற புரோத்தேலஸ் |
| | | (vi) | வாஸ்குலார் திசுக்களற்ற தேலஸ் |
| | | (vii) | வாஸ்குலார் திசுக்களுடன் கூடிய ரைசாய்டு. |

*விடைகள் :*

a) __________

b) __________

c) __________

d) __________

ஒருவரியில் விடையளிக்க : 4 × 1 = 4

43. DNA மறுசேர்க்கை தொழில்நுட்பம் ( Recombinant DNA technology ) என்றால் என்ன ?

**( SPACE FOR ROUGH WORK)**

44. முதுகு நாணிகளின் ( Chordates ) இரண்டு சிறப்பு பண்புகளை எழுதுக.

45. கீழ்வரும் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஒரு சுரப்பியினுள் பொதிந்துள்ள சுரப்பியின் செயலினைத் தருக.



46. பவர் லூமிற்கு ( Power loom ) அருகில் வசிக்கும் ஒரு பையன் எங்கு சென்றாலும் அதிக சத்தமாக பேசும் பழக்கத்தை கொண்டிருக்கிறான். இதற்கான அறிவியல் காரணத்தை தருக.

**( SPACE FOR ROUGH WORK)**

பின்வரும் வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளி : $6 \times 2 = 12$

47. நெய்யிலுள்ள வனஸ்பதியை நீவீர் எந்த சோதனையின் மூலம் அறியலாம் ?

48. காரணங்கள் தருக :

a) HIV தொற்றுக்கு மருந்து கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

b) மஞ்சட்காமாலையால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஸ்கிளிரா மற்றும் தோல் மஞ்சளாக உள்ளது.

**( SPACE FOR ROUGH WORK)**

49. குடித்துவிட்டு காரை ஓட்டும் காரோட்டிகள், குடிக்காமல் காரோட்டும் காரோட்டிகளை விட அதிக விபத்துகளை ஏற்படுத்துவது ஏன் ? இச்சூழ்நிலையில், மூளையின் எப்பகுதி சரிவர செயல்படுவதில்லை ?

50. புறசெவியிலிருந்து ( Outer ear ) உட்செவிக்கு ( Inner ear ) ஒலி அலைகள் செல்லும் பாதையை காட்டுக.

**( SPACE FOR ROUGH WORK)**

51. ஏரியோலார் திசுவின் ( Areolar tissue ) இரண்டு பணிகளைக் கூறுக.

52. பிளாட்டிபஸ் ஆனது ஆமையை விட அதிக பரிணாம வளர்ச்சியை பெற்றுள்ளது என்பதை வலியுறுத்த உதவும் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.

( SPACE FOR ROUGH WORK)

பின்வருவனவற்றிற்கு விடையளி : 2 × 3 = 6

53. a) நைட்ரிபிகேஷன் மற்றும் டிநைட்ரிபிகேஷன் இவற்றுக்குள்ள ஒரு வேறுபாட்டை குறிப்பிடுக.

b) ஒரு தொழிற்சாலையிலிருந்து ஆற்றில் வெளிவிடப்படும் கழிவானது அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக உள்ளது. எனில், ஆற்றில் காணப்படும் உயிரினங்களில் இது ஏற்படுத்தும் விளைவு யாது ?

c) சூழ்நிலை சமநிலையில் ( Ecological balance ) சாறுண்ணிகள் ஆற்றும் பங்கு என்ன ?

**( SPACE FOR ROUGH WORK)**

54. நரம்பு செல்லின் ( Neuron ) படம் வரைந்து ஏதேனும் இரண்டு பாகங்களை குறிக்கவும்.

**( SPACE FOR ROUGH WORK)**

55. மனித கண்ணின் குறுக்கு வெட்டுத்தோற்றத்தை வரைந்து பின்வரும் பாகங்களை குறிக்கவும் : 4

a) ஃபோவியா ( Fovea )

b) லென்ஸ் ( Lens ).

**( SPACE FOR ROUGH WORK)**

**( SPACE FOR ROUGH WORK)**